525

# சமயமும் சமூகமும்

அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ., எம். லிட்.

தமிழ்க்கலைப் பதிப்பகம்,
சென்னை—30

உரிமைப் பதிப்பு] 1958 [விலை ரூ. 2·25

ஜூன் 1958

விற்பனை உரிமை :

பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை 1.

முத்தமிழ் அச்சகம், காஞ்சிபுரம்.

## உள்ளே


| பொருள் | பக்கம் |
| --- | --- |
| 1. சமயமும் சமூகமும் (சித்தாந்தம், திங்கள் இதழ்) | 1 |
| 2. சமரசம் (மலேயா மலர்) | 30 |
| 3. 'தீதொழிய நன்மை செயல்' (மாணவர் வெளியீடு) | 45 |
| 4. சமய வாழ்க்கை (இளைஞர் மாநாட்டுத் தலைமை உரை) | 73 |
| 5. 'அஞ்சுவது யாதொன்றும் இல்லை' (சமயச் சொற்பொழிவு) | 96 |
| 6. நடு நிசி மணி ஒலி (தனிகை வழிபாட்டு மலர்) | 109 |
| 7. அமைதி வேண்டுமா? (குருகுலம்—திங்கள் இதழ்) | 126 |
| 8. ஆண்டான் அடிமை (அமிர்தவசனி—திங்கள் இதழ்) | 131 |
| 9. சங்க காலத்தில் சிவன் (சமாசப் பொன்விழா மலர்) | 136 |

# முன்னுரை

சமயம் உலகில் பன்னெடுங்காலமாய் வாழ்கின்றது. சமூகமும் அப்படியே. இரண்டும் ஒன்றை ஒன்று பற்றியே வாழ்கின்றன. எனினும், இரண்டையும் வேறுபடுத்தி ஒன்றை ஒன்று பற்றுமலும் வாழலாம் எனப் பேசுகின்றவரும் உள்ளனர். ஆயினும், ஆழ்ந்து நோக்கின், சமூகவாழ்வின் அடிப்படையாகவே சமயம் விளங்குகிறது என்பது புலனுகும். இந்த உண்மையை விளக்க எழுந்த கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல்.

இந்நூலில் ஒன்பது கட்டுரைகள் இடம் பெறுகின்றன. இவை அனைத்தும் ஒருசேர எழுதப்பட்டவை அல்ல. சிற்சில இதழ்களுக்கு அவ்வப்போது எழுதியனவும், இரண்டோர் இடங்களில் பேசியனவுமே ஈண்டுத் தொகுக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் இரண்டொன்று கடந்த போர்க்காலக் கட்டுரைகள் என்னலாம். எனவே, அவற்றுள் போர் பற்றிய குறிப்புக்களும் இடம் பெறுகின்றன. இவை பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் பேசியும் எழுதியும் வெளிவந்த கட்டுரைகள் ஆதலின், இவற்றுள் இரண்டொரு கருத்துக்களும், பெரியார்தம் பாடல்களும் திரும்பத்திரும்ப இடம் பெற்றிருக்கக் கூடும். எனினும், அவ்வக்கட்டுரையிலும் அவை தொடர்ந்து பொருள் காட்டப் பயன்படுகின்றன என்பதைப் பயில்வோர் அறிவர். சமயம் அன்று

மட்டுமன்றி இன்றும் என்றும் மனித வாழ்வுக்குத் தேவையான ஒன்று என்ற கருத்தே நூல் முழுவதும் தொடர்ந்து செல்லும் கருத்தாகும். எனவே தான் இந்நூல் 'சமயமும் சமூகமும்' என்ற பெயரிலேயே வெளியிடப்பெறுகின்றது. முதற்கட்டுரையின் தலைப்பும் இதுவே.

இந்நூல் அச்சாகுங்கால் பிழைகளைத் திருத்தி உதவி புரிந்த தமிழறிஞர் **மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை** அவர்களுக்கு என் நன்றி உரியது.

என்னோடு இணைந்து வாழ்ந்து அண்மையில் உயிர் நீத்த என் வாழ்க்கைத்துணைவியார் **சந்திரமணி**யின் மறைவுக்குப் பின்வரும் முதல்நூல் இதுவாகும். எனவே, இதை அவருக்கு அன்புப் படையலாக்கி வெளியிடுகின்றேன்.

தமிழ்க்கலை இல்லம்,
சென்னை-30,
10-7-1958.

**அ. மு. பரமசிவானந்தம்**